**நோயாளிகளின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்**

இந்த கையேடானது, பல்வேறு ஆதாரங்களில் இருந்து தொகுக்கப்பட்ட நோயாளியின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளின் விரிவான பட்டியலாகும். சுகாதார சேவைகளை பெறும் நோயாளிகளுக்கு தேவையான தகவல்களை தரும் கையேடாக இது இருக்கும்.

**நோயாளியின் பொறுப்புகள்**

| **உங்கள் சிகிச்சை மற்றும் உடன்பாடு:** | **மருத்துவமனை மற்றும் பிற நபர்களுக்கு:** |
|---|---|
| ஒரு நோயாளியாக, கீழ்க்கண்டவை உங்கள் பொறுப்பாகும்.<br><br>• உங்கள் தற்போதைய மற்றும் கடந்தகால மருத்துவ வரலாறு, நீங்கள் உட்கொண்ட மருந்துகள், உங்களுக்கு செய்யப்பட அறுவை சிகிச்சைகள் மற்றும் சிகிச்சை குறித்த பிற தகவல்களை துல்லியமாகவும், முழுமையகவும் உங்கள் மருத்துவருக்கு வழங்கவும்.<br>• உங்கள் மருத்துவப் பதிவுகள்/அறிக்கைகளை மருத்துவர் அணுகக்கூடிய வகையில் வைத்திருங்கள்<br>• உங்கள் மருத்துவர் பரிந்துரைத்த சிகிச்சைத் திட்டத்தை நீங்கள் கண்டிப்பாகப் பின்பற்றுவது மட்டும் இல்லாமல் , உங்களுக்கு சிகிச்சையளிக்கும் சுகாதாரப் பணியாளர்களின் அறிவுறுத்தல்களுக்கு உடன்படுவதையும் உறுதிசெய்யவும்.<br>• உங்கள் மருத்துவர் கூறும் அறிவுரைகளை பின்பற்றாவிட்டால் அதற்கு நீங்கள் மட்டுமே பொறுப்பாவீர்கள் . எனவே, | ஒரு நோயாளியாக, கீழ்க்கண்டவை உங்கள் பொறுப்பாகும்.<br><br>• மருத்துவமனை வளாக சொத்துக்களை சேதப்படுத்தாமல் இருப்பது<br>• மருதுவமனைக்கு வரும் மற்ற நோயாளிகளின் உரிமைகளை சேதப்படுத்தாமல் இருப்பது<br>• மருத்துவர்கள், செவிலியர்கள், துணை மருத்துவர்கள், மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் மருத்துவமனைக்கு வருகை தரும் பிற நபர்களின் பொருட்களை சேதப்படுத்தாமல் இருப்பது.<br><br>**உங்கள் நிதி நிலைமை:**<br><br>ஒரு நோயாளியாக, கீழ்க்கண்டவை உங்கள் பொறுப்பாகும்.<br><br>• உங்களுக்கு வழங்கப்படும் சுகாதார சேவைகளுக்கான தொகையை முன்கூட்டியே அறிந்து கொள்ளுங்கள்.(உங்களுடைய காப்பீட்டுத் தகவல்களை அறிந்து |

| | |
|---|---|
| பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சை திட்டத்தை உங்களால் பின்பற்ற முடியாவிட்டாலோ அல்லது சிகிச்சையில் ஏதேனும் சந்தேகம் இருந்தாலோ உங்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவரிடம் தெரிவிக்கவும்<br>• சிகிச்சை பெறும் சமயத்தில் உங்கள் உடலில் ஏற்படும் முன்னேற்றங்களை கண்காணித்து, அவற்றை சரியான நேரத்தில் உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்கவும்<br>• மருத்துவர் சந்திப்புகளை சரியாக தொடருங்கள். அவ்வாறு செய்ய முடியாவிட்டால் உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்கவும்<br><br>**உங்களுக்கு வழங்கப்படும் மரியாதை மற்றும் பாரபட்சமற்ற சிகிச்சை:**<br><br>ஒரு நோயாளியாக, கீழ்க்கண்டவை உங்கள் உரிமைகளாகும்.<br><br>• நீங்கள் யாராக இருந்தாலும், உங்கள் நம்பிக்கைகள் என்னவாக இருந்தாலும், உங்கள் தேசியம், நீங்கள் பணம் செலுத்தும் முறை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், பாரபட்சமின்றி நடத்தப்பட வேண்டும். உங்களுக்கு தேவைப்படும் சிகிச்சைகள் மற்றும் வசதிகள் அந்த குறிப்பிட்ட மருத்துவமனையில் இருந்தால் எவ்வித பாகுபாடும் காட்டாமல் உங்களுக்கு சிகிச்சை வழங்கப்பட வேண்டும்.<br>• உங்களுக்கு சிகிச்சை வழங்கப்படும் போது , எல்லா நேரங்களிலும், எல்லா சூழ்நிலைகளிலும், நீங்கள் மரியாதையுடன் நடத்தப்பட | கொண்டு அவற்றை தேவைப்படும் பட்சத்தில் உடனடியாக வழங்குங்கள்)<br><br>**உங்கள் வாழ்க்கை முறை:**<br><br>உங்கள் வாழ்க்கை முறையில் ஏற்படும் மாற்றங்கள், உங்கள் உடல் நிலையில் ஏற்படுத்தும் விளைவுகளுக்கு நீங்கள் மட்டுமே பொறுப்பாவீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.<br><br>**உங்கள் சிகிச்சை குழுவை அறிந்து கொள்ளுங்கள்**<br><br>ஒரு நோயாளியாக, கீழ்க்கண்டவை உங்கள் உரிமைகளாகும்.<br><br>• உங்களுக்கு சிகிச்சை வழங்கும் மருத்துவர் மற்றும் பிற சுகாதார பணியாளர்களின் அடையாளம் மற்றும் மருத்துவமனையில் அவர்களது பதவி ஆகியவற்றை அறிந்து கொள்ளுங்கள்<br><br>**உங்கள் சிகிச்சையை புரிந்து கொள்ளுங்கள்:**<br><br>ஒரு நோயாளியாக, கீழ்க்கண்டவை உங்கள் உரிமைகளாகும்.<br><br>• உங்கள் நோயறிதல், சிகிச்சை முறை மற்றும் உங்கள் உடல்நிலையில் ஏற்படும் முன்னேற்றம் பற்றிய முழுமையான மற்றும் தற்போதைய தகவல்களை நீங்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் பெறுங்கள்.<br>• சிகிச்சை முடிவுகளை எடுப்பதில் நீங்கள் மருத்துவருடன் |

வேண்டும்.

**உங்கள் தனியுரிமை:**

ஒரு நோயாளியாக, கீழ்க்கண்டவை உங்கள் உரிமைகளாகும்.

• உங்களுக்கு செய்யப்படும் பரிசோதனைகளின் போது உங்கள் தனியுரிமை நிச்சயமாக காக்கப்பட வேண்டும். உங்கள் உடல்நலன் குறித்த ஆலோசனைகள் பாதுகாப்பாக வழங்கப்பட வேண்டும்.
• உங்கள் மருத்துவ பதிவுகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் மட்டுமே பார்க்கும் வண்ணம் இருக்க வேண்டும்
• உடல் பரிசோதனைகள் /சிகிச்சைகள் செய்யப்படும் போது உங்கள் பாலினத்தைச் சேர்ந்த ஒருவரை இருக்கச் செய்யுங்கள்

**உங்கள் பாதுகாப்பு மற்றும் நீங்கள் வழங்கும் ஒப்புதல்கள்:**

ஒரு நோயாளியாக, கீழ்க்கண்டவை உங்கள் உரிமைகளாகும்.

• நீங்கள் மருத்துவமனையில் தங்கியிருக்கும் போதும், சிகிச்சைகளை மேற்கொள்ளும் போதும் மிகுந்த பாதுகாப்புடன் நடத்தப்படுவீர்கள் என்று எதிர்பார்க்கலாம்.
• நீங்கள் தானாக முன்வந்து எழுத்துப்பூர்வ ஒப்புதலை வழங்காத வரை, எந்த சிகிச்சையும் உங்களுக்கு செய்யப்படாது. (உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அவசர நிலைகளில் ஒத்துழைக்கலாம். ஆராய்ச்சி திட்டங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் பெற்ற பிறகு அவற்றிலும் பங்கேற்கலாம்.
•சட்டத்தின் வரம்பிற்குள் உங்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவையை ஏற்கலாம் அல்லது மறுக்கலாம். அதே வேளையில், நீங்கள் சிகிச்சையை மறுக்கும் பட்சத்தில் அது உங்கள் மருத்துவரின் தொழில் நெறிமுறைகளுடன் முரண்படாமல் இருப்பதை உறுதி செய்யுவும்.

**வேறொரு மருத்துவரிடம் இரண்டாவது ஆலோசனை பெறுதல்:**

ஒரு நோயாளியாக, கீழ்க்கண்டவை உங்கள் உரிமைகளாகும்.

• நீங்கள் விரும்பினால், உங்கள் தற்போதைய மருத்துவரின் அனுமதியுடனோ/இல்லாமலோ, நீங்கள் சிகிச்சை பெறும் மருத்துவமனைக்குள்ளோ அல்லது வெளியில் வேறு மருத்துவரிடமோ இரண்டாவது ஆலோசனையை பெறலாம்.

**புகார் மேலாண்மை மற்றும் பில்லிங்:**

ஒரு நோயாளியாக, கீழ்க்கண்டவை உங்கள் உரிமைகளாகும்.

• நீங்கள் பெறும் அனைத்து சேவைகளுக்கும் பில் வழங்கப்பட வேண்டும். நீங்கள் விரும்பினால், பில் செய்யப்பட்ட சேவைகளின் விவரங்களை உங்களுக்கு விளக்கவும்

| | |
|---|---|
| அல்லது உங்களால் ஒப்புதல் தர இயலாத நிலையில் இருந்தால் இவற்றை விதிவிலக்காக கொள்ளலாம்)<br><br>• உங்கள் சிகிச்சைக்கு மொழி தடையாக இருந்தால் நீங்கள் மொழிபெயர்ப்பாளரை அணுகலாம். | வேண்டும்<br><br>• உரிமை மீறல் குறித்து உங்களுக்கு ஏதேனும் புகார்கள் இருந்தால், புகார் செய்யப்படும் முறை பற்றியும், அது செயல்படுத்தி, தீர்க்கப்படும் முறை பற்றியும் அறிந்து கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு. |

தயவுசெய்து உங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை சரியான முறையில் பயன்படுத்தவும். மருத்துவமனையில் உங்களுக்கு சிறப்பான சிகிச்சையை வழங்கினாலும், சிகிச்சையின் விளைவுகளுக்கு நீங்களும் சமமாகப் பொறுப்பாவீர்கள்.